பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
28 05 2025 **WEDNESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மஹாராஷ்ட்ரா மற்றும் மத்தியப்பிரதேசத்தில் 3 ஆயிரத்து 399 கோடி ரூபாய் செலவிலான ரயில்வே மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. மத்திய அமைச்சரவையின் முடிவுகள் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
3. யோகா பயிற்சி உடல்நலனை மட்டுமின்றி மனநலனையும் பாதுகாக்க உதவிடும் என்று ஹரியான முதலமைச்சர் திரு. **Nayab Singh Sainy** தெரிவித்துள்ளார்.
4. தங்க நகைக்கடன் பெறுவதற்கான விதிமுறைகளை கடுமையாக்கி ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.
5. தாய்லாந்து ஓப்பன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் தமன்னா, பிரியா மற்றும் தீபக் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் மத்தியப்பிரதேசத்தில் 3 ஆயிரத்து 399 கோடி ரூபாய் செலவிலான ரயில்வே மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதறகான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்த திட்டப்பணிகள் நிறைவடையும் என்றார்.

இந்த திட்டங்கள் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆந்திராவில் 3 ஆயிரத்து 653 கோடி ரூபாய் மதிப்பிலான நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நடப்புப் பருவத்தில் 14 வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு மாற்றியமைக்கப்பட வட்டி மானியத்துடன் கூடிய குறுகியகால கடன் வழங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்

அமைச்சரவை முடிவுகள் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வேளாண் வளர்ச்சியில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதை இது வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

வேளாண் துறையின் நீடித்த வளர்ச்சிக்கு இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிதேசம் மற்றும் மஹாராஷ்ட்ரா மாநிலங்களின் ரயில்வே மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, பயணியர் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கு பெரிதும் உதவிடும் என்றும் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகனும், மத்திய அமைச்சரவையின் முடிவுகளுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டிற்கும், விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்ட்ராவில் ரயில்வே மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கும், ஆந்திராவில் சாலை மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவிடும் என்று திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

பத்ம விருது பெற்றவர்கள் எதிர்கால சந்ததியினருக்கு உந்துசக்தியாக திகழ்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் பத்ம விருது பெற்றவர்களுக்கு விருந்து வழங்கி கௌரவித்த பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமான மாற்றங்களை மேற்கொண்டவர்களை கௌரவிக்கும் வகையில் பத்ம விருதுகள் வழங்கப்படுவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

குஜராத்தில் கிராம பஞ்சாயத்து அமைப்புகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் 22ஆம் தேதி நடைபெறும் என்று அம்மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

காந்திநகரில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில தேர்தல் ஆணையர் டாக்டர் முரளி கிருஷ்ணா, இதற்கான வேட்புமனு தாக்கல் அடுத்த மாதம் 2ஆம் தேதி தொடங்கி, 9ஆம் தேதிவரை நடைபெறும் என்றார்.

வேட்புமனுக்கள் அடுத்த மாதம் 10ஆம் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மனுக்களை விலக்கிக் கொள்ள 11ஆம் தேதி கடைசி நாளாகும் என்றும் அவர் கூறினார்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 25ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

8 ஆயிரத்து 326 கிராம பஞ்சாய்த்து அமைப்புகளுக்கு இந்த தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் டாக்டர் முரளி கிருஷ்ணா கூறினார்.

>>>>>><<<<<

யோகா பயிற்சி உடல்நலனை மட்டுமின்றி மனநலனையும் பாதுகாக்க உதவிடும் என்று ஹரியான முதலமைச்சர் திரு. **Nayab Singh Sainy** கூறியுள்ளார்.

சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதிய உடற்பயிற்சி இல்லாததன் காரணமாக, உடல்நலம் மட்டுமின்றி மனநலனும் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கூறினார்.

யோகா பயிற்சி இதற்கு மிகப்பெரிய தீர்வாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் நாள்தோறும் யோகா பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. **Nayab Singh Sainy** கூறினார்.

**>>>>>><<<<<**

பாகிஸ்தானை ஒட்டிய எல்லைப்பகுதிகளில் அவசரகால போர் ஒத்திகை நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர காலத்தின் போது எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து இதில் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், ஜம்மு காஷ்மீருக்கு உட்பட்ட எல்லையோர மாவட்டங்களில் இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அரசு துறைகள், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டத்தின் பிரதிநிதிகள் இந்த பயிற்சியை வழங்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<**

தங்க நகைக்கடன் பெறுவதற்கான விதிமுறைகளை கடுமையாக்கி ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இப்பிரச்சினையில் நிதியமைச்சர் தலையிடுமாறும் முதலமைச்சர் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

இதே கருத்தை வலியுறுத்தி ரிசர்வ் வங்கியின் கவர்னருக்கும் திரு. மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>>><<<<<**

மணிப்பூரில் தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த 10 சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆளுநரை சந்தித்து, புதிய அரசை அமைக்க உரிமை கோரினர்.

இம்பால் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, 44 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இந்த சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. **Thokchom Radheshyam Singh,** புதிய அரசு அமைப்பது குறித்து பிஜேபியின் மத்திய தலைமை உரிய முடிவெடுக்கும் என்றார்.

>>>>>><<<<<

ஐ.நா அமைதிப் படையில் இடம்பெற்றிருந்தபோது உயிரிழந்த இரண்டு இந்தியர்களுக்கு மறைவுக்குப் பிந்தைய விருது வழங்கப்படும் என்று ஐ.நா அறிவித்துள்ளது.

ஐ.நா அமைதிப் படைக்கான சர்வதேச தினத்தை ஒட்டி நாளை நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

பிரிகேடியர் ஜென்ரல் **Amitabh Jha** மற்றும் ஹவில்தார் சஞ்சய் சிங், கடந்த ஆண்டு ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றும் போது உயிர்த் தியாகம் செய்தனர்.

அவர்களின் தியாகத்தை போற்றும் வகையில் இந்த விருது வழங்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஐ.நா அமைதிப் படைக்கு பங்களிப்பதில் நான்காவது பெரிய நாடாக இந்தியா உள்ளது குறிப்பித்தக்கது.

>>>>>><<<<<

அஸ்ஸாம், மேகாலயா, கர்நாடகா, கேரளா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை மிககனமழை முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், ஒடிசா, தெலங்கானா, மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களிலும் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், உத்ராகண்ட், சத்திஷ்கட், ஜார்கண்ட், மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

தாய்லாந்து ஓப்பன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் தமன்னா, பிரியா மற்றும் தீபக் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 51 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தமன்னா, சீன தைபேயின் **Liu Yu Shan**-ஐ வென்றார்.

மகளிர் 57 கிலோ எடைபிரிவு காலிறுதி ஆட்டத்தில் பிரியா, தென்கொரியாவின் **Park Ah Hyun-**ஐ வென்றார்.

ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவு காலிறுதியில் தீபக், தென்கொரியாவின் **Kim Hieon Tae-**யை வென்றார்.

>>>>>><<<<<

ஆசிய உள்ளரங்கு படகு சாம்பியன் போட்டியில் இந்தியா 9 தங்கம் உள்பட 15 பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தின் **Pattya-**வில் நடைபெற்ற இப்போட்டியில் **Saksham, Gursewak Singh, Gouri Nanda, Anita, Konganapalle Narayana, Anyatm Rajkumar, Paspula Krishna Rao, James Joseph,** சித்தார்த்த சுனில் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

**>>>>>><<<<<**

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-16, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Choong Hon Jian – Muhammad Haikal** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Treesa Jolly – Gayathri Gopichand** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**>>>>>>END<<<<<**